**அ.வ.எண். 33/2014**

**பி.வா.சா.8 : மோகன்ராஜ்**

**தேதி : 06.04.2026**

**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**

**<u>1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

நான் விவசாயம் மற்றும் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். நான் கவுன்சிலராக தற்போது உள்ளேன். என் மீது சட்டத்திற்கு புறம்பாக சீட்டு நடத்தி வருவதாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை. நீங்கள் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. 01.04.2026 ஆம் தேதியன்று நான் நீதிமன்றத்திற்கு வராததற்கு காரணம் என் மனைவியின் தாத்தா இறந்துவிட்டார். 1 ஆம் பிரதிவாதி நடராஜனுக்கு கெஸ்ட் ஹவுஸ் கிடையாது என்று சொன்னால் ஆரம்பத்தில் இருந்தது, தற்போது விற்றுவிட்டார். 1 ஆம் பிரதிவாதிக்கு எப்போதும் கெஸ்ட் ஹவுஸ் இருந்தது கிடையாது என்று சொன்னால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதியாகிய நடராஜனுக்கும், உங்களுக்கும் எந்த காலத்தில் நிலம் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக எந்தவொரு தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. நீங்கள்

அவரது கெஸ்ட் ஹவுஸ்க்கு செல்லும்போது பிரபு மற்றவர்களும் மது அருந்திக்கொண்டிருந்தார்கள் என்று தவறாக சொல்லுகிறீர்கள் என்றால் சரியல்ல. கோகுலுக்கு மது அருந்தும் பழக்கமே இல்லையென்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ஆவணங்கள் 05.07.2011 ஆம் தேதியன்று எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ஆவணங்களில் நான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன், மற்றொரு சாட்சி யாரென்று எனக்கு தெரியாது. 1 ஆம் பிரதிவாதி வாதியிடமிருந்து எத்தனை கிரையப்பத்திரங்கள், எந்தெந்த இடம், எந்தெந்த தேதியில் கிரையம் வாங்கியுள்ளார் என்ற விபரம் உங்களுக்கு தெரியுமா என்றால் எனக்கு தேதி ஞாபகம் இல்லை, ஒரே தேதியில் மொத்தம் 3 கிரையம் வாங்கியுள்ளார். வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையே என்ன தொகை பேசிக்கொண்டார்கள் என்ற விபரம் உங்களுக்கு நேரடியாக தெரியுமா என்றால் தொகை பேசிக்கொள்ளவில்லை மேலும் பணமும் கொடுக்கவில்லை. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள்தான் 1 ஆம் பிரதிவாதி, வாதியிடமிருந்து கிரையம் பெற்ற ஆவணங்களாகும். மேற்சொன்ன 3 ஆவணங்களிலும் நான் சாட்சியாகவோ, சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று.

ஆளறிச்சாட்சியாக கையொப்பம் போடவில்லை. நான் பதிவு அலுவலகத்திற்கு மேற்சொன்ன மூன்று ஆவணங்களும் 1 ஆம் பிரதிவாதி, வாதியிடமிருந்து பெறும்போது நான் பதிவு அலுவலகத்திற்கு உள்ளே செல்லவில்லை, வெளியே இருந்தேன். மேற்சொன்ன வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 ஆவணங்களும் 08.07.2011 ல் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பொது அதிகார பத்திரம் ரத்து செய்யும்போது வாதியும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று அங்கு வருகை பதிவேட்டில் கையொப்பமும், ரேகை பதிவேட்டில் ரேகையும் வைத்தார் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ஆவணங்கள் எழுதப்பட்டதும், பதிவு செய்யப்பட்டதும் ஒரே நாளா அல்லது வேறு வேறு நாட்களா என்றால் ரத்து செய்ததும், பதிவு செய்ததும் ஒரே நாள்தான். நீங்கள் வழக்கிறக்காக பொய்யாக சொல்லுகிறீர்கள் என்றால் சரியல்ல. ரத்து செய்த பத்திரம் மூன்று நாட்கள் கழித்துதான் கிரையம் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பொது அதிகார ரத்து பத்திரம் மற்றும் கிரைய ஆவணம் பெற்றதற்கும் எந்தவொரு சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. காரில் வைத்து பத்திரங்களில் வாதியிடமிருந்து 1 ஆம் பிரதிவாதி கையொப்பம் பெறவில்லை என்று தவறாக கூறியுள்ளீர்கள் என்று

சொன்னால் சரியல்ல. பொது அதிகார ரத்து பத்திரம் யார் எழுதினார்கள் என்றால் ஆவண அமைப்பு யார் செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. இதுநாள் வரை கிரைய ரத்து பத்திரத்தில் யார் ஆவண அமைப்பாளர் என்பதை கேட்டு தெரிந்து கொண்டீர்களா என்றால் இல்லை. வேலாயுதம்பாளையம் காவல் நிலையத்தில் 20.07.2011 ஆம் தேதியன்று நான்தான் புகார் கொடுத்தேன், அந்த புகாரில் உள்ள கையொப்பமும் என்னுடையதுதான், அது முறையே பி.வா.சா.ஆ.18 மற்றும் பி.வா.சா.ஆ.19 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2 ஆம் பிரதிவாதி புகைப்பட நகலாக இருப்பதால் பி.வா.சா–ஆ.18 மற்றும் பி.வா.சா.ஆ.19 ஆவணங்களை ஆட்சேபனை தெரிவித்தார், சாட்சியே மேற்சொன்ன ஆவணங்களை அவருடையது என்று கூறியதால் மேற்படி ஆவணங்கள் ஆட்சேபனையின்றி ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது, மேலும் சாட்சி ஆவணங்களை ஒப்புக்கொண்டுள்ளபடியால் அதனை குறியீடு செய்யப்பட்டுள்ளது.) மேற்சொன்ன புகாரில் நீங்கள் 1 ஆம் பிரதிவாதி கெஸ்ட் ஹவுஸ்சில் வைத்து போதை ஊசி போட்டார், மது அருந்துவிட்டார் என்று நீங்கள் புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.18 ஆவணத்தில் நீங்கள் 1 ஆம் பிரதிவாதி நடராஜன் மீது

காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் இருந்து மேற்சொன்ன பி.வா.சா.ஆ.18 புகாருக்காக உங்களை மற்றும் கோகுல் மற்ற புகாரில் குறிப்பிட்டுள்ள நபர்களை அழைத்து காவல் துறையினர் விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். விசாரணையில் கோகுல் 2 கோடி ரூபாய் பெற்றுக்கொண்டு கிரையம் செய்துள்ளதாக எழுத்து பூர்வமாக கூறியுள்ளார் என்றும், அதில் கையொப்பமும் செய்துள்ளார் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. மேலும், வாதி கோகுல் 1 ஆம் பிரதிவாதி நடராஜன் மது வாங்கி கொடுத்தாகவோ, ஊசி போட்டதாகவோ சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். இருதரப்பு வாக்குமூலங்கள் அடிப்படையில் பி.வா.சா.ஆ.18 புகார் முடிக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். நீங்கள் சொத்தை அபகரிக்க அடியாட்வேலை செய்கிறீர்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன வழக்கை தவிர என் மீது வேறு ஒரு கொலை முயற்சி வழக்கு என் மீது உள்ளது. உங்கள் பேரிலும், 1 ஆம் பிரதிவாதி நடராஜன் பெயரிலும் கூட்டாக எந்தவொரு வழக்கும் இல்லையென்று சொன்னால் சரியல்ல. பானுமதி என்பவர் ஒரு உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளார், அந்த வழக்கு என்ன வழக்கு என்று தெரியுமா என்றால்

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1ல் ஒரு வழக்கு உள்ளது, அது என்ன வழக்கு என்று எனக்கு தெரியாது. நீங்கள் தவறாக கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான கிரைய ஆவணங்களில் உங்களுக்கு எந்தவொரு தகவலும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. வாதி மற்றும் 2 ஆம் பிரதிவாதி தெய்வாணையம்மாள் ஆகியோர் இருவரும் சேர்ந்து உங்களுக்கு பணம் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்க அறிவுறுத்தியுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. வாதியிடமிருந்து சொத்தை வாங்குவதற்கு 1 ஆம் பிரதிவாதி நடராஜன் கோகுலை பயன்படுத்தி கொண்டார் என்று நீங்கள் தவறாக சொல்லுகிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் நடராஜன் தரப்பில் ஒரு ஆள் வாதி கோகுலுக்கு ஊசி போட்டுள்ளார் என்று தவறாக கூறியுள்ளீர் என்றால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதி நடராஜன், வாதிக்கு எந்த காலத்திலும் மது வாங்கிக்கொடுக்கவில்லை என்றும், ஊசி போடவில்லை என்றும், அவரது வசம் வாதி வைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. கோகுல் பெயரில் நடராஜன் மறுப்பு அறிவிப்பு எப்போது, எந்த நாளிதழில், மற்றும் எந்த வழக்கறிஞர் மூலம் கொடுத்தார் என்றால் தேதி தெரியாது, எந்த தேதியில் யார் கொடுத்தார்கள் என்றும் எனக்கு தெரியாது.

கோகுல்தான் மறுப்பு அறிவிப்பு கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. மறுப்பு அறிவிப்பு சம்மந்தமாக 1 ஆம் பிரதிவாதி உங்களிடம் பேசியுள்ளார் என்று தவறாக கூறியுள்ளீர் என்றால் சரியல்ல. வாதி கோகுல் 2 கோடி பெறுவதற்கான எந்தவொரு அறிகுறியும் தெரியவில்லை என்று தவறாக கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் எழுதிய பிறகு 1 ஆம் பிரதிவாதி, வாதியை அவரது வசம் அழைத்து ஒரு வார காலம் மது போதையில் வைத்திருந்தார் என்று தவறாக கூறியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. வாதி கோகுல் அவரே 1 ஆம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் பேசி, தொகை பெற்றுக்கொண்டு, கிரையத்திற்கு பின்னிட்டு அவரும், 1 ஆம் பிரதிவாதியும் தனித்தனியே சென்றுவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்களுக்கு நடராஜன் தொகை கொடுப்பதற்காக உங்கள் வங்கி கணக்கை கேட்டதாக தவறாக கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதி நடராஜனின் மகன் நீங்கள் உங்களுடைய வங்கி கணக்கு எண்ணை கொடுக்காததால் உங்கள் மாமனாருக்கு போட்டதாக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் அவ்வாறு உங்கள் மாமனாரின் வங்கிக்கணக்கில் போட்ட 10

இலட்சம் ரூபாயில் அதனை மீண்டும் நீங்கள் 1 ஆம் பிரதிவாதியிடம் கையில் கொடுத்ததாக தவறாக கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. பொது அதிகார பத்திரத்தில் நான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன், அந்த பொது அதிகார பத்திரம் இதுதான், அது பி.வா.சா.ஆ.20 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் மற்றொரு பொது அதிகார பத்திரத்தில் நான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன், அந்த பொது அதிகார பத்திரம் இதுதான், அது பி.வா.சா.ஆ.21 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நானும், பிரதிவாதி தரப்பு சாட்சி 6 பிரபுவும் நல்ல உறவுமுறையில்தான் உள்ளோம். கார்த்திக், பிரபு, லோகநாதன் அவர்களை விசாரித்தது பற்றி தெரியுமா என்றால் விசாரித்தது பற்றி தெரியும், என்ன விசாரித்தார்கள் என்று தெரியாது. பிரபு வாங்கிய பொது அதிகார பத்திரத்தில் உள்ள அனைத்து சொத்துக்களையும் 1 ஆம் பிரதிவாதி வாங்கிவிட்டாரா என்றால் எனக்கு தெரியாது. சொத்துக்களுக்கு 1 ஆம் பிரதிவாதி, வாதியிடமிருந்து வாங்கிய சொத்துக்களுக்கு தாய்பத்திரம் என்ன என்று எனக்கு தெரியாது. 1 ஆம் பிரதிவாதி நடராஜன் ஒரு இலட்சம் பணம் பெற்றுக்கொண்டுள்ளதாக கூறுவது அப்பட்டமான பொய் என்று சொன்னால் சரியல்ல. நிலம் வாங்க 1 ஆம் பிரதிவாதி உங்களுக்கு

சன்மானமாக பணம் கொடுப்பார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. 2 ஆம் பிரதிவாதி தெய்வாணை எந்த வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு தினசரி அறிவிப்பு கொடுத்தார் என்றால் வழக்கறிஞர் தெரியாது, தினசரி நாளிதழ் ஞாபகம் இல்லை. நீங்கள், பிரபு மற்ற சாட்சிகள் கோகுல், தெய்வாணை ஆகியோர்கள் கள்ளக்கூட்டு சேர்ந்து 1 ஆம் பிரதிவாதியை ஏமாற்றவேண்டும் என்ற எண்ணத்தில் ஒன்றாக செயல்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.04.06 17:57:58 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.